# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAKARAN DATED 29.04.2025

# சிறந்த மத்திய பல்கலையில் ஒன்றாக புதுச்சேரி பல்கலைக்கழகம் தேர்வு



புதுச்சேரி பல்கலைக்கழகம் சிறந்த மத்திய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக தேர்வானதற்காக பேராசிரியர்களை துணைவேந்தர் பிரகாஷ்பாபு பாராட்டினார்.

**புதுச்சேரி, ஏப். 29:** புதுச்சேரி பல்கலைக்கழகம், ஐஐஎஸ்சி பெங்களூருவுடன் இணைந்து, அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை வழங்கும் துரிதப்படுத்தப்பட்ட கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான கூட்டாண்மைகள் (PAIR) எனும் உயரிய கூட்டாய்வு திட்டத்தை பெற்றிருக்கிறது. தேசியக் கல்வி கொள்கை 2020ஐ அடிப்படையாக கொண்டு வடிவமைக்கப்பட்ட இந்த கூட்டாய்வு ஆராய்ச்சி திட்டம், முன்னணி பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையேயான ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது.

என்ஐஆர்எப் தரவரிசையை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்ட மூன்று பிரிவுகளில், புதுச்சேரி பல்கலைக்கழகம் முதல் பிரிவில் சிறந்த மத்திய பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் இணை நிறுவனமாக புதுச்சேரி பல்கலைக்கழகம், மைய நிறுவனமாக உள்ள ஐஐஎஸ்சி பெங்களூரு மற்றும் இன்ன பிற இணை நிறுவனங்களான ஐஐஇஎஸ்டி ஷிபுர், என்ஐடி நாகாலாந்து, கலிக்கட் பல்கலைக்கழகம், பெங்களூர் பல்கலைக்கழகம் மற்றும் குமாஉன் பல்கலைக்கழகம் ஆகியவைகளுடன் இணைந்து பணியாற்ற உள்ளது.

30 மைய நிறுவனங்கள் விண்ணப்பித்த நிலையில், 7 மைய நிறுவனங்களே தேர்வு செய்யப்பட்டன. அதில் ஐஐஎஸ்சி-1, ஐஐடிக்கள்-3, என்ஐடி-1 மத்திய பல்கலைக்கழகங்கள்-2 உள்ளன. புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்களைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களில், புதுச்சேரி பல்கலைக்கழகம் மட்டுமே தேர்வான ஒரே மத்திய மைய நிறுவனம் ஆகும்.

புதுச்சேரி பல்கலைக்கழகதுணைவேந்தர் பிரகாஷ் பாபு, இந்த சாதனையை பாராட்டி, பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் இணை நிறுவனங்களிலிருந்து வந்த பேராசிரியர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். இது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சியில் புதுவை பல்கலைக்கழகம் சிறந்த பாதையில் பயணிக்கிறது என்பதற்கான முக்கியமான அடையாளமாகும் என்றும் தெரிவித்தார்.

THILAI MAIL DATED 29.04.2025

SRI ANNAMALAIYAR ACTING DRIVERS
Good Driver
BEST SERVICE
D.K.Kumar
PUDUCHERRY
860 860 5550 94432 55788

RNI No. PONBIL/2021/82208
Email: thillaimaildaily@gmail.com
THILLAI MAIL
தில்லை மெயில்
செய்திக்கு:94426 34795
மலர் : 4 இதழ் : 316
VOLUME: 4 ISSUE: 316
தினசரி காலை நாளிதழ்
6 பக்கம் ரூ.500 காசு
புதுச்சேரி (29-4-2025) செவ்வாய்க்கிழமை
PUDUCHERRY(29-4-2025) TUESDAY

புதுவையின் புகழ் பெற்ற ஸ்தாபனம்
கௌதம் ஜீவல்லரி
ஹோல்சேல் கடை
916 HALLMARK SHOWROOM
+914132339 999, 2333 916, 90475 78000

# பேராசிரியர் கிளமெண்ட் சகாயராஜா லூர்து அறக்கட்டளை பல்கலைக்கழக தமிழ்மொழி இலக்கிய புலத்தில் தொடக்கம்



புதுச்சேரி, ஏப்.29–

புதுவைப் பல்கலைக்கழகச் சுப்ரமணிய பாரதியார் தமிழ்மொழி மற்றும் இலக்கியப் புலத்தில் பேராசிரியர் கிளமெண்ட் சகாயராஜா லூர்து அறக்கட்டளை நிறுவும் விழா தமிழியிற்புலக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கம்பராமாயண பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப் போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. துறைத் தலைவர் கருணாநிதி வரவேற்புரை வழங்கினார். அறக்கட்டளை நிறுவனரான பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாச்சாரத் துறை இயக்குனர், ஆங்கில துறை பேராசிரியர் கிலமெண்ட் சகாயராஜா லூர்து அறக்கட்டளையின் நோக்கம் குறித்தும் உரையாற்றினார்.

பேராசிரியர் சுடலைமுத்து தலைமை தாங்கினார். புதுவைப் பல்கலைக் கழகத்தின் இயக்குனர் தரணிக்கரசு தமிழை இயலாக மட்டுமல்லாமல் இசையாக கற்பிக்கவும், பயிலவும் வேண்டும் என்றார்.

செம்மொழித் தமிழ் மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவர் சுதா சேஷியன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் தமிழியற்புல உதவிப்பேராசிரியர் இலட்சுமி தத்தை நன்றி கூறினார்.

ARACIAL AATHMAA DATED 29.04.2025

# Pondicherry University Signed MoU with Central Power Research Institute, Bangalore




Pondicherry University and Central Power Research Institute Bangalore officially signed a Memorandum of Understanding (MoU), marking a significant milestone in fostering academic and research collaboration. The agreement, signed in a ceremony brings together two premier institutions to drive innovations in the electrical power systems, renewable energy technologies, and sustainable development solutions.

Prof. P. Prakash Babu, Vice-chancellor, Pondicherry University, emphasized the strategic importance of this partnership, stating that it aligns well with the university's aspiration to strengthen industry-academic linkages. "This partnership represents a perfect synergy between academic excellence and industrial expertise. At Pondicherry University, we are committed to creating industry-relevant knowledge ecosystems, and this collaboration with CPRI will enable our students and faculties to work on transformative projects that address India's growing energy demands while maintaining the environmental sustainability.

Together, we will develop cutting-edge solutions that can be implemented at both national and global levels." he said.

Shri. B.A. Sawale, Director General of CPRI, echoed these sentiments, stating, "As India's premier power research institution, CPRI recognizes the critical importance of bridging the gap between the laboratory research and commercial applications. This MoU with Pondicherry University allows us to combine our state-of-the-art testing facilities and decades of industry experience with the Pondicherry University's strong academic foundation and research capabilities"

The MoU establishes multiple avenues for the collaboration, including joint research projects, faculty exchange programs and expert lectures, student internships and hands-on training at CPRI facilities, shared access to research facilities and laboratories and organization of national conferences and workshops leading to an enhanced academic and research co-operation.

In his address, Prof. S. Victor Anandkumar, Dean (International Relations), Pondicherry University, spoke about the university's expanding global and industrial outreach as well as the similarities and potential synergies with CPRI Bangalore leading to transformative partnership in the field of Energy and Power systems.

Prof. P. Elumalai, MoU co-ordinator and faculty member of the Department of Green Energy Technology, elaborated "This collaboration is the result of nearly a year of careful planning and discussions. It is particularly significant that it creates a structured platform for continuous interaction between our faculties and CPRI's scientists, ensuring that the partnership remains dynamic and productive."

Prof. B. M. Jaffar Ali, Dean of Madanjeet School of Green Energy Technologies, expressed his delight at the potential impact this partnership will have across the university's academic landscape.

Prof. Tharanikkarasu, Director (SEIRR), Prof. Rajneesh Bhutani, Registrar (i/c), faculty members and representatives from both institutions participated in the MoU ceremony. This collaboration marks a pivotal step in advancing academic exchange between Pondicherry University and CPRI, laying the foundation for a vibrant, knowledge-driven partnership.

ARACIAL AATHMAA DATED 29.04.2025

# புதுவைப் பல்கலைக்கழகம், பெங்களூரு ஐஐஎஸ்சியுடன் இணைந்து, அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையின் புதிய கூட்டு ஆய்வு ஒத்துழைப்புத் திட்டத்தை செயல்படுத்தவுள்ளது



புதுவைப் பல்கலைக்கழகம், பெங்களூருவில் உள்ள ஐஐஎஸ்சி நிறுவனத்துடன் இணைந்து, அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை வழங்கும் விரைவுப்படுத்தப்பட்ட கண்டுபிடிப்பு, ஆராய்ச்சியில் கூட்டு ஒத்துழைப்புத்திட்டத்தை செயல்படுத்தவுள்ளது. தேசியக் கல்வி கொள்கை 2020ஐ அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட இந்தக் கூட்டு ஆராய்ச்சி திட்டமானது முன்னணி பல்கலைக்கழகங்களுக்கும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இடையேயான ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய தரவரிசை நிறுவன அமைப்பின் மூலம் தரவரிசையை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்ட மூன்று பிரிவுகளில், புதுவைப் பல்கலைக்கழகம் முதல் பிரிவில் சிறந்த மத்திய பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இணை நிறுவனமாக பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், மத்திய நிறுவனமாக உள்ள ஐஐஎஸ்சி பெங்களூருவுடனும் பிற இணை நிறுவனங்களான ஐஐஇஎஸ்டி ஷிபுர், என்ஐடி நாகாலாந்து, காலிக்கட் பல்கலைக்கழகம், பெங்களூர் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்ற உள்ளது.

அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை, ஜனவரி மாதத்தில் கூட்டு மானியத்திற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுத்தது. தீவிரமான மதிப்பீட்டின் அடிப்படையில் முடிவை மேற்கொள்ள, புதுவை பல்கலைக்கழகம் உட்பட பல்வேறு பல்கலைக்கழகங்கள் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் அகாடமிக்கு அழைக்கப்பட்டன. இதில் ஐஐஎஸ்சி மூலம், புதுவை பல்கலைக்கழகம் உட்பட இணை நிறுவனங்கள் தங்களின் கூட்டாய்வுத் திட்டத்தை சமர்பித்தன. புதுவை பல்கலைக்கழகம் சார்பில் துணைவேந்தர், ஆராய்ச்சி இயக்குநர், திட்ட ஒழுங்குபடுத்துநர் ஆகியோர் சேர்ந்த குழு பங்கேற்றது.

இந்த இணைத் திட்டம், பலதுறை அடிப்படையிலான ஆராய்ச்சி ஷை குறிப்பாக செயல்பாட்டு பொருட்கள், உயிரி பொருட்கள், கணிப்பீட்டு பொருட்கள் ஆகியவற்றை ஆற்றல், உயிர் மூலம் கண்டறிதல், சுகாதாரம், தூண்டி செயலிகள், திசு பொறியியல் ஆகிய பயன்பாடுகளுக்காக மேற்கொள்ளப்படுகறது. இந்த மானியமானது, கூட்டுச் சிறப்பாய்வுகள், பயிற்சி நிகழ்ச்சிகள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்களுக்கான பரஸ்பர கல்வி பரிமாற்றங்கள் ஆகியவற்றை ஊக்குவிக்கும்.

இந்த இணைத் திட்டத்தில் பங்கேற்கும் நிறுவனங்களின் பேராசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும் தங்கள் சிறப்புத்திறனை பகிர்ந்து கொள்வதன் மூலம் முக்கியமான அறிவியல், சமூக சவால்களை எதிர்கொள்ள அவர்களுக்கு உதவும். நிறுவனங்களுக்கு இடையே அறிவு பரிமாற்றம், மேம்பட்ட ஆராய்ச்சி வசதிகளை அணுகும் வாய்ப்பும் வழங்கப்படுகிறது. 30 மத்திய நிறுவனங்கள் விண்ணப்பித்த நிலையில், 7 மத்திய நிறுவனங்களே தேர்வு செய்யப்பட்டன. அதில் ஐஐஎஸ்சி, 3 ஐஐடிக்கள், 1 என்ஐடி, 2 மத்திய ஆகியவை பல்கலைக்கழகங்கள் உள்ளன. புதுச்சேரி, தமிழ்நாடு, கேரள மாநிலங்களைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களில், புதுவைப் பல்கலைக்கழகம் மட்டுமே தேர்வான ஒரே மத்திய மைய நிறுவனம் ஆகும்.

பாண்டிச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பிரகாஷ் பாபு, இந்த சாதனையைப் பாராட்டி, பல்கலைக்கழக பேராசிரியர்கள், இணை நிறுவனங்களிலிருந்து வந்த பேராசிரியர்கள் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்தார். இது அறிவியல்ரு தொழில்நுட்ப ஆராய்ச்சியில் புதுவை பல்கலைக்கழகம் சிறந்த பாதையில் பயணிக்கிறது என்பதற்கான முக்கியமான அடையாளமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.